## சுருக்கம்

தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் – அரசு அலுவலகங்களில் பெறப்படும் மனுக்கள் - குறைதீர் மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான நடைமுறைகள் – அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்டது - அலுவலக நடைமுறை நூலில், அத்தியாயம் 22 , பத்தி 167 பிரிவு (ii) - க்கு திருத்தங்கள் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

### பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை

**அரசாணை(நிலை) எண். 73**

நாள்: 11.06.2018
விளம்பி வருடம், வைகாசி 28
திருவள்ளுவராண்டு 2049

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை(நிலை) எண்.99, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஏ) துறை , நாள் 21.09.2015.
2. முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் க.எண். R.A.2(3)/32051/2017, நாள்:13.03.2018.

********

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலுக்கு திருத்தங்கள் வெளியிடக்கோரும் முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துருவிற்கு ஒப்புதல் அளித்து, அதன்படி தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலில் கீழ்காணும் திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

### திருத்தம்

மேலே கூறப்பட்டுள்ள அலுவலக நடைமுறை நூலில், அத்தியாயம் 22, "மனுக்கள், அவற்றை அனுப்புதலும் முடிவு செய்தலும்" என்ற தலைப்பின் கீழ் பத்தி 167 பிரிவு (ii)-ல் ஏற்கனவே உள்ள துணை பத்திகள் 1, 2, 3, 4 மற்றும் 5 க்கு பதிலாக கீழ்க்கண்டவை சேர்க்கப்படுகிறது.

1. குறைகளைவு மனு பெறப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் மனுவைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை உடனடியாக அனுப்பப்படவேண்டும்.
2. குறைகளைவு மனு பெறப்பட்ட நாளிலிருந்து அதிகபட்சமாக ஒரு மாதத்திற்குள் குறை களையப்பட வேண்டும்.

(து.பி.பா.)

3. குறைகளைவு மனுக்களை வழங்கிய குடிமக்கள் அரசுத்துறைகளை அணுகும்போது, அவர்களது குறைகளைவு மனுவின் மீதான நடவடிக்கை தொடர்பான நிலையினை அவர்களிடம் தெரிவித்தல் வேண்டும்.

4. ஏதேனும் காரணங்களால் மனுவை இறுதி செய்ய கூடுதல் கால அளவு தேவைப்படுகிற நேர்வில், குறைகளைவு மனு அளித்த நபரிடம், மனுவை இறுதி செய்வதற்கான நீட்டிக்கப்பட்ட கால அளவு குறித்து எழுத்து பூர்வமாக தெரிவிக்கப்பட வேண்டும்.

5. மனுதாரரின் கோரிக்கையை ஏற்க இயலாத நேர்வில் அதற்குரிய காரணத்துடன் கூடிய பதிலை பாதிக்கப்பட்ட குடிமகனிடம் வரையறுக்கப்பட்ட கால அளவான ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கலாம்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கிரிஜா வைத்தியநாதன்**
**அரசு தலைமைச் செயலாளர்.**

<u>பெறுநர்:-</u>

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.
அனைத்து துறைத் தலைவர்கள்/ மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள் / குற்றவியல் தலைமை நீதிபதிகள்.
பதிவாளர் , சென்னை உயர்நீதிமன்றம், சென்னை – 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை – 600 003.

<u>நகல்:-</u>

வருவாய் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை – 600 009.
தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009,
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை செயலாளரின் தனிச்செயலர்,
சென்னை– 600 009.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (நி.சீ-II) துறை , சென்னை– 600 009.
(இணைய தளத்தில் வெளியிடுவதற்கு)
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறையின் அனைத்து பிரிவுகள்,
சென்னை– 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

12/6/18
பிரிவு அலுவலர்.
11.6.18